# நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளாக் நிறுவனம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கதினைத் தவிர்த்து நவீன தொழில்நுட்பத்திற்காக ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

நிறுவனத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட அனைத்து கணக்கீட்டு கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக – ஆராய்ச்சி செலவுகள், வெளி செயற்திட்டச் செலவுகள், கண்காட்சி மற்றும் கருத்தரங்குச் செலவுகள் என்பவற்றை கணக்கீடு செய்தல்.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு கணக்குகளில் காட்டமுடியாது என்ற போதிலும் ரூபா 5,910 தொகையான கடன்கொடுத்தோர் வரவு மீதி ரூபா 6,455 தொகையான செலவு மீதியிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 195,025 தொகையான கடன்பட்டோர் மீதி தொடர்பாக ஐயக் கடன்களுக்காக போதியளவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) கடன்பட்டோர்களில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 73,171 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக நிறுவனம் முறையான நடைமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ரூபா 11,112,136 தொகையான கடன்பட்டோர் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

(i) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 645,917 தொகையான கடன்கொடுத்தோர் மீதி தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 415,500 தொகையான கடன்கொடுத்தோர் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்தவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) அதிகாரச்சட்டம் | |

| | | |
|---|---|---|
| (i) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் ஊழியர்களின் மொத்த உழைப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கணிக்கப்பட்டதன் காரணமாக 2011 சனவரியிலிருந்து திசெம்பர் வரை முறைப்படி ரூபா 1,119,763 மற்றும் ரூபா 134,372 தொகையான ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் குறைவாகக் கணித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 371(2)(ஆ) | ரூபா 20,000 வரை மாத்திரமே குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்பட முடியும் என்ற போதிலும் அதனை விட ரூபா 40,000 மற்றும் 50,000 ஆக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. தீர்த்துவைக்கப்படும் போது 20 வேலை நாட்களுக்கு மேல் தாமதித்து தீர்த்துவைக்கப்பட்ட 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) | நி.பி 751 | பல ஆண்டுகளாக இருப்பேட்டுப் பொருட்கள் தொடர்பாக பொருள் இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(இ) சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 2006 பெப்ரவரி 10 ஆந் திகதிய CSA/1/1/2006 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை | நிறுவனத்தின் இரண்டு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் கௌரவ பிரதம மந்திரி அவர்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது வெளிநாடு சென்றிருந்தார்கள். |
| (ii) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 | நிறுவனத்தின் 301-3949 ஆம் இலக்க |

ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை

மற்றும் NA-2228 ஆம் இலக்க இரண்டு வாகனங்களுக்கு அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறுவனத்திக் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 53.2 மில்லியன் அரசாங்கத்தின் பங்களிப்பினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 3.6 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 52.9 மில்லியன் அரசாங்க பங்களிப்பினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 5.9 மில்லியன் மிகையான இருந்தது. உள்ளக வருமானம் ரூபா 5.0 மில்லியனால் அதிகரித்தமையும் மீண்டுவரும் செலவுகள் ரூபா 7.3 மில்லியனால் அதிகரித்தமையும் இதற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 71.4 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் இறுதியில் அதற்கு நேரொத்த தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 61.9 மில்லியனாக இருந்ததனால் தொழிற்பாட்டு மூலதனத்தில் ரூபா 9.5 மில்லியனால் முன்னேற்றம் ஒன்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) ரோபோ ஆய்வுகூடத்தினை அபிவிருத்தி செய்வதற்காக உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.5 மில்லியன் 2010 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அக்கொள்வனவு இடம்பெறாததன் காரணமாக ரோபோ ஆய்வு கூடத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இரண்டு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது எதுவித செயற்பாடுகளையும்

மேற்கொண்டிருக்காததன் காரணமாக மூடப்பட்டிருந்தன. அது தொடர்பாக ரூபா 32,894 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) நஸ்டா செயற்திட்டத்தின் (Nasda Project) நிதிகளிலிருந்து அதன் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு ஆண்டின் போது எதுவித கொடுக்கல்வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த நிதிகளிலிருந்து ரூபா 428,958 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்படுகின்றன.

(ஈ) கல்வி நிதியம் மற்றும் பயின்டிஸ் எனும் நிதிகளிலும் மிகவும் குறைந்த செயற்பாடே காணப்பட்டதுடன் அவற்றின் நிதிகளிலிருந்து முறையே ரூபா 749,597 மற்றும் ரூபா 3,753,394 தொகைகள் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள சமிக்ஞை கோபுரம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தற்போதுள்ள உடன்படிக்கை காலம் முடிவடைவதுடன் 2010 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2011 திசெம்பர் 30 ஆந் திகதி வரை புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து 2011 திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 60,000 படி கிடைக்க வேண்டிய ரூபா 1,380,000 தொகையான வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அது நிதி அறிக்கைகளிலும் காட்டப்பட்டிருக்க வில்லை.

(iii) மேற்கூறிய கோபுரத்திற்கான மேற்பார்வை நடவடிக்கைகளை முறையாக நிறைவேற்றாததன் காரணமாக அது மிகவும் துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் பழுதுபார்ப்பதற்காக ஆண்டின் போது ரூபா 644,051 தொகையினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஏனைய நிறுவனங்களுக்கு ரூபா 1,827,309 தொகையான விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்தும் அப்பணத்தினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டிற்கான திறைசேரி மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 22 மில்லியன் தொகையில் ரூபா 10 மில்லியன் தொகையான கொள்வனவுகள் 2011 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 2.5 மில்லியன் நிதி ஏற்பாடு செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) பின்வரும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள் அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்கள் | பெறுமதி<br>ரூபா | அவதானிப்பு |
|---|---|---|---|
| I | பாவனைப் பொருள் R மற்றும் D இருப்புக்களின் 44 விடயங்களும் R மற்றும் D கணனி பாவனைப் பொருள் இருப்புக்களின் 52 விடயங்களும் | - | 2005 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2005 பெப்ரவரி 28 ஆந் திகதி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிடமிருந்து தற்காலிக அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 60-5413 ஆம் இலக்க பேருந்து 02 பயணங்களை மாத்திரம் பல்வேறு செயற்திட்டங்களுக்காக மேற்கொண்டிருந்ததுடன் குறைவான பாவனை நிலையில் காணப்பட்டது. இந்த பேருந்து தற்பொழுது பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட நிலையில் இருப்பதனால் விற்றுத்தீர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

Voltage recorder – VR Leco செயற்திட்டம் 2009 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்திருந்த போதிலும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 376,475 தொகை மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப் பணத்தினை உரிய நிறுவனத்திடமிருந்து மீளளிப்புச் செய்ய முடியாதிருந்ததனால் கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட நட்டம் அவதானிக்கப்பட்டது.

## 3.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 70 | 31 | 39 |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 70 | 41 | 29 |
| | 140 | 72 | 68 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 68 பதவிகள் அதாவது 49% ஆன வெற்றிடங்கள் காணப்பட்டதனால் பல்வேறு செயற்திட்டங்களின் செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதற்கு இந்த நிலைமை தாக்கமளித்திருந்தது.

இது தொடர்பாக பணிப்பாளரின் கருத்துரையாவது

''தொழில்நுட்ப பதவியணியினருக்காக தற்பொழுது நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் சமமான தகமைகளுக்காக ஏனைய நிறுவனங்கள் செலுத்தும் சம்பளங்களுக்கும் படிகளுக்குமிடையே காணப்படுகின்ற அதிக அளவான வேறுபாட்டின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரைச் சேர்த்துக்கொள்ளல் மிகவும் சிக்கலான செயற்பாடாக உள்ளது.''

(ஆ) 2006 சனவரி 01 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் 6/2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் சம்பளங்களைச் செலுத்துவதற்காக 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் பதவி தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய DMS/E2/24/4/171/2 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்காக 18 பதவிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை.

## 4. கணக்களி தன்மையும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2007 - 2011 வரையான காலத்தினை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செயல்நடவடிக்கைத் திட்டங்களின் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை வருடாந்தம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிரயத் தரவுகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தினை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

(i) அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களில் பெரும்பாலானவைகளின் நிதிசார் பெறுமதிகள் வெவ்வேறாக மதிப்பீடு செய்து காட்டப்பட்டிருக்காததனால் உள்ளடக்கப்பட்ட செயல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ii) ஒரு பகுதி பூர்த்திசெய்யப்பட்டிருந்த செயற்பாடுகளின் முழுமைத்தன்மை போதியளவில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) நிறுவனத்தின் பல்வேறுபட்ட 06 பிரிவுகளின் கீழுள்ள வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 68 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 26 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.3 கொள்வனவுத் திட்டம்**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1., 4.2.2 மற்றும் 4.2.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம், கொள்வனவு கால அட்டவணை கொள்வனவு கால அட்டவணைக்காக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய உரிய படிவம், விடயங்கள் முதலியவற்றைத் தயார்செய்து அதற்கிணங்க கொள்வனவு செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீடு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2.1 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்கு, ஐந்தொகை, காசேட்டக்கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(i) பாதீடு

(ii) வாகனப் பயன்பாடும் கட்டுப்பாடும்

(iii) மனிதவளங்கள் முகாமைத்துவம்

(iv) முற்பணங்கள் வழங்கலும் தீர்த்துவைத்தல்களும்

(v) கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்.